1971 ஜூலை 22]

குறைத்து. வேறு பகுதிகளில் அவர்களுக்கான சிகிச்சைகள் அளிக்கும் ஏற்பாட்டை மேற்கொள்ளலாம் என்ற எண்ணம் இருக்கிறது. அதைப் பரிசீலித்துச் செயலாற்ற சில காலமாகும்.

Master Plan for Madras City

*373. *Q.* THIRU N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(*a*) whether the Government has formulated Master Plan for Madras City; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (ஆ) சென்னை பெரு நகர்ப் பகுதிக்குரிய இடைக்காலத் திட்டமொன்று, 1967-ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. இந்த இடைக்காலத் திட்டத்திற்கென்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் அடிப்படையிலும் சென்னை மாநகருக்கும் சென்னை பெருநகர்ப்பகுதியிலும் அண்மைக் காலத்தில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியைக் கருத்திற்கொண்டும் 1971-91 காலத்திற்கான ஓர் இருபதாண்டு தொலை நோக்குத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இவ்விரண்டு திட்டங்களும் தற்போது அலுவலக ஆவணங்களாகவே உள்ளன. தற்போது சட்டப் பேரவையின் பரிசீலனையிலுள்ள புதிய நகர்ப்புறத்திட்ட மசோதாவானது "Town and Country Planning Bill" சட்டமாக நிறைவேற்றப்பட்ட பின்னரே, சென்னைப் பெருநகர்ப் பகுதிக்குரிய பெருந்திட்டத்தைச் சட்ட அடிப்படையில் மேற்கொள்ள முடியும்.

திரு. சு. துரைசாமி: சென்னை, கோவை, மதுரை போன்ற . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சென்னை நகரத்தைப் பற்றி மட்டும் கேளுங்கள். கொள்கை விளக்கத்தை இதில் கேட்கக் கூடாது.

திரு. சு. துரைசாமி: சென்னை நகரில் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற எவ்வளவு காலம் பிடிக்கும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: முதலில் கேட்ட கேள்வி பாட்டியாரைப் போல் பேத்தி ஆக எவ்வளவு காலம் பிடிக்கும் என்று. இரண்டாவது கேள்வி, பாட்டியாருக்கு இன்னும் தேவையான வசதிகள் செய்து கொடுப்பதற்கு எவ்வளவு காலம் ஆகும் என்பதாகும். சென்னை நகரம் பெரிய பகுதியாக இருப்பதால், இப்படி தேர்ந்தெடுத்திருப்பதாகக் கருத முடியாது. சென்னை நகரில் மக்கள் தொகை மிகுதியாக இருக்கிறது. இதனால் ஏற்படுற பொது நல்வாழ்வுப் பிரச்சினைகள் அதிகமானது, ஆகவே இருபதாண்டு காலத்திட்டம் என்பது சென்னை நகரின் வளர்ச்சிக்காக என்பதைவிட சென்னை நகர நெருக்கடியைத் தவிர்ப்பதற்காக என்று கொள்ள வேண்டும்.

DR. H. V. HANDE : Sir, even though this will all take place only after the Town and Country Planning Bill becomes an Act, may I know from the Hon. Minister whether it is possible to give some indication as to whether we are going to have a ring road around the City as suggested by the Estimates Committee and whether the transport system just like tube railways, underground railways, more electric railway routes, whether all these things will be taken into consideration, whether it is possible to give some indication as to the broad details on which this Master Plan is going to be executed?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்போதைய சென்னை நகரம் ஏற்கனவே ஓரளவு விரிவுபடுத்தப்பட்ட நகரந்தான் என்று சொன்னாலும், இன்றைக்கு ஏற்பட்டு வருகிற பெரிய தொழில் வளர்ச்சி, போக்குவரத்துப் பெருக்கம், மக்கள் தொகைப் பெருக்கம் காரணமாக, ஆட்சி முறையில் இல்லாவிட்டாலும் 450 சதுர மைல் அளவுள்ள விரிவான நகராக உள்ளத்தில் கொண்டு தெற்குப் பகுதியில் செங்கற்பட்டு நகரத்தையும், மேற்குப் பகுதியில் திருவள்ளூர் நகரத்தையும், வடக்கே கும்மிடிப்பூண்டி நகரத்தையும் சுற்றுப்புற நகர் என்ற அடிப்படையில் ஏற்றுக் கொண்டு அந்த நகரங்களுக்கும் சென்னை நகருக்கும் இடையில் தெற்குப் பகுதியில் தாம்பரம், பரங்கிமலை, மேற்குப் பகுதியில் ஆவடி அம்பத்தூர், வடக்குப் பகுதியில் மணலி, மீஞ்சூர், ஆகியவற்றைச் சென்னையின் கிளை நகரங்களாகக் கருதி, கிளை நகரங்களில் இரண்டு மூன்று லட்சம் மக்கள் வாழவும், சுற்றுப்புற நகரங்களில் ஒரு லட்சம் மக்கள் வாழவும், அந்த வகையிலே போக்குவரத்து இணைப்பை ஏற்படுத்தவும், குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்கவும், குடிசை மாற்று வாரியத்தின் மூலம் இடையிலுள்ள குடிசைகளை மாற்றவும், குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தித் தரவும், விரிவான திட்டமிட்டு 20 ஆண்டுக் காலத்தில் நிறைவேற்றினால் சென்னை நகர மக்கள் படுகிற பல்வேறு இன்னல்களைத் தவிர்க்க முடியுமென்ற வகையில் 338 கோடி ரூபாய்க்குத் திட்டமிடப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கிடையில் 1971-ல் இருந்து 1976-க்குள் ஐந்தாண்டுக் காலத்தில் 185 கோடி ரூபாய்க்கு இடைக்காலத்தில் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டுமென்ற பரவலான கருத்தும் இருக்கிறது. இந்தக் கருத்தை நிறைவேற்றுவதற்கான வழியும், வாய்ப்பும் அண்மையில் நிறைவேற்றப்பட இருக்கிற டவுன் அண்டு கண்ட்ரி பிளானிங் பில் நிறைவேறிய பிறகு ஏற்படும். அதற்குப் பிறகு அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் விளக்கமான பதிலைச் சொல்லியிருக்கிற காரணத்தால், மேற்கொண்டு துணைக் கேள்விகள் தேவையில்லை என்று கருதுகிறேன்.